1979 ஏப்ரல் 21]

இராயபுரம் தொகுதியில் கட்டப் பட்டுள்ள புதிய குடியிருப்புகள்.

* வினா எண். 761—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைஇராயபுரம் தொகுதி வண்ணாரப்பேட்டை, 10-ஆவது வட்டம் கிழக்கு கல்லறைச் சாலையில், குடிசை மாற்று வாரியத்தில் இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள 460 புதிய குடியிருப்புகளிலும் பாதுகாப்பற்ற நிலையும் மின் வசதியில்லாத மற்றும் சுகாதாரமற்ற நிலையும் இருப்பதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்குவதற்கு அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ)

அவ்வாறான நிலமையில்லை. குடியிருப்புகளில் தனித்தனி குளியல் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு ஏழு தெரு மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. வீடுகளுக்கு மின் விளக்கு வசதிகள் அதில் குடியிருப்பவர்களே செய்து கொள்ள வேண்டும். அதற்கு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தடையின்மை சான்றிதழ் (No Objection Certificate) அளிக்கின்றது. தற்போதைக்கு மேல் நிலைத் தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

Government Papayee Hospital at VALAYAPATT

* Q. No. 762. Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether there is any proposal to start an X-ray Unit at Government Papayee Hospital at Valayapatti in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) & (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா வலயப்பட்டி அரசினர் பாப்பாயி மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவி அமைப்பதற்கு 1979-80 நிதியாண்டில் ரூ. 1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் போதாது. இன்னும் அதிகமான சலுகைகள் செய்து தரவேண்டும். உப

வட்டாரங்களில் 20 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். சிறுநீர், ரத்த பரிசோதனை நிலையங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையான சேவை செய்ததாகும். அதையெல்லாம் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : ஒவ்வொன்றாக படிப்படியாகச் செய்வதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நீண்ட காலத் தேவையாக இருந்த எக்ஸ்ரே மெஷின் பொருத்தப்பட்டு கிராம மக்கள் நல்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு அது நிறுவப்பட்டிருக்கிறது.

திரு. விஜயரகுநாத தொண்டமான் : எக்ஸ்ரே அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. புதுக்கோட்டை வட்டத்திலும் சரி, வலையப்பட்டியிலும் சரி, எக்ஸ்ரே இருக்கும் இடங்களில் பிலிம் கிடைப்பதில்லை. இதனால் சமயத்தில் எக்ஸ்ரே எடுக்க முடியாமல் போகிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர் சௌந்தரராஜன் : தற்போது அத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்றுதான் மாவட்ட தலைமை மருத்துவமனைக்குத் தேவையான அளவுக்குப் பிலிம்கள் ஒதுக்கப்பட்டு அவ்வப்போது வட்ட மருத்துவ மனைகளில் பிலிம்கள் தட்டுப்பாடு ஏற்பட்டால் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்காவது இல்லையென்ற நிலை உருவாகி அதனால் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்ற நிலை இருந்தால் அதை அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விருதாசலம் அரசினர் மருத்துவமனை

* வினா எண். 763 திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) விருத்தாசலம் அரசினர் மருத்துவமனையை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) இந்த மருத்துவமனையில் X-ray கருவியும் ரத்தப் பரிசோதனை நிலையமும் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?